**கவனிக்க.**- இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில மொழிகளில் தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1676 - 2010 ඔක්තෝබර් මස 15 වැනි සිකුරාදා - 2010.10.15

*1676 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV(அ) - மாகாண சபைகள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - | கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1452 | நானாவித அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - | | - |
| பதவிகள் - வெற்றிடம் | - | | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2010, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வியாழக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# மாகாண சபை அறிவித்தல்கள்

## ஊவா மாகாண மாகாண சபை

*2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க "ஊவா மாகாண ஆளுநரின் நிதியம்" பற்றிய நியதிச்சட்டத்தை திருத்துவதற்கான திருத்தப்பட்ட நியதிச்சட்டம்*

ஊவா மாகாண சபைக்குள் செயற்படுத்துவதற்காக உத்தேசித்துள்ள மேல் குறிப்பிடப்பட்டுள்ள திருத்தப்பட்ட நியதிச்சட்டத்தை பொது மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக கீழே பிரசுரிக்கின்றேன்.

இவ்வறிவித்தல் வர்த்தமானியில் வெளியாகி 10 தினங்களின் பின் ஊவா மாகாண சபைக்கு சமர்ப்பிக்கும்படி அறியத்தரப்படுகிறது. இச்சட்டத்தில் உள்ளடங்கும் விடயங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என எதிர்பார்க்கப்பட்டால் இவ்வறிவித்தலின்படி 10 தினங்களுக்குள் அவ்விடயங்கள் என்னிடம் அறியத்தரப்பட வேண்டும்.

எச். எம். சோமதிலக,
ஊவா மாகாண ஆளுநரின் செயலாளர்.

ஊவா மாகாண ஆளுநரின் அலுவலகம்,
இராஜ வீதி,
பதுளை,
2010.09.15.

10-495/1

---

## ஊவா மாகாண, மாகாண சபை

*2003 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க "ஊவா மாகாண ஆளுநரின் நிதியம்" பற்றிய நியதிச்சட்டத்தை திருத்துவதற்கானதொரு 2010 ஆம் ஆண்டின் .......................... ஆம் இலக்க "ஊவா மாகாண ஆளுநரின் நிதியம்" பற்றிய நியதிச்சட்டம்*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபையினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுகின்றது :

சுருக்கப் பெயர்.

01. இந்நியதிச்சட்டமானது, ஊவா மாகாண 2010 ஆம் ஆண்டின் ................ ஆம் இலக்க ஊவா மாகாண ஆளுநரின் நிதியம் (திருத்த) நியதிச்சட்டம் என எடுத்துரைக்கப்படுகிறது.

முதன்மை நியதிச்சட்டத்தின் 03 (02) ஆ பிரிவை திருத்துதல்.

02. 2003 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க ஊவா மாகாண ஆளுநரின் நிதியம் பற்றிய நியதிச்சட்டத்தின் 03 (02) ஆ பிரிவு "ஊவா மாகாணத்தின் முதலமைச்சர் எனும் பகுதிக்குப் பதிலாக "ஊவா மாகாணத்தின் முதலமைச்சர் அல்லது அவரால் பெயர் குறிப்பிடப்படும் அவருடைய பிரதிநிதி ஒருவர்" என்னும் பகுதியை இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

முதன்மை நியதிச்சட்டத்தின் 12 என்னும் புதிய பிரிவை உட்புகுத்தல்.

03. முதன்மை நியதிச்சட்டவாக்கத்தின் 12 என்னும் கீழ்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

"இந்நியதிச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்கும்."

10-495/2

## தேசிய அரசுப் பேரவையின் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கங் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டத்துடன் வாசிக்கப்படும் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் கீழ் கூட்டுறவுச் சங்கங்களைக் குலைத்து ஒழித்துக் கட்டல்

*கீழ்க் குறிப்பிடப்படும் கூட்டுறவுச் சங்கங்கள் அதன் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து குலைக்கப்பட்டு ஒழித்துக் கட்டப்பட்டுள்ளது என்பதனை 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்கம் கொண்ட கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) சட்டங்களுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 57 (2) பிரிவின்கீழ் இத்தால் அறியத்தருகின்றேன்.*

ஜே. எஸ். அருள்ராஜ்,
கூ. அ. ஆணையாளரும், கூ. ச. பதிவாளரும். (வ.மா.)

| தொ. இல. | முன்பிருந்த பதிவு இல. | சங்கத்தின் பெயர் | மூடப்பட்ட திகதி | மாவட்டம் |
|---|---|---|---|---|
| 01 | J/1390 | வரைவற்ற அளவெட்டி வடக்கு பூமகள் ஐக்கிய நாணய சங்கம் | 2004.03.17 | யாழ்ப்பாணம் |
| 02 | JE/107 | வரைவற்ற புலோலி சுருட்டு, புகையிலை உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம் | 2006.01.26 | யாழ்ப்பாணம் |
| 03 | J/931 | வரைவற்ற புதுக்கமம் ஐக்கிய நாணய சங்கம் | 2006.01.26 | மன்னார் |
| 04 | MN/35 | வரைவுள்ள மன்னார் மாவட்ட கைத்தொழிற் கூட்டுறவு சங்க சமாசம் | 2006.05.10 | மன்னார் |
| 05 | MN/44 | வரைவுள்ள நானாட்டான் ப.நோ.கூ. சங்க சமாசம் | 2006.05.24 | மன்னார் |
| 06 | MN/ 143 | வரைவுள்ள மன்னார் மாவட்ட தெங்கு பனம்பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்கம் | 2006.06.12 | மன்னார் |
| 07 | SS/25 | வரைவற்ற எருக்கலம்பிட்டி மகளிர் மகாவித்தியாலய கூட்டுறவு சங்கம் | 2006.09.21 | மன்னார் |
| 08 | SS/22 | வரைவற்ற விடத்தல்தீவு மகா வித்தியாலய கூட்டுறவு சங்கம் | 2007.03.07 | மன்னார் |
| 09 | VM/144 | வரைவற்ற கொண்டச்சிக்குடா முகம்மதியா ஐக்கிய நாணய சங்கம் | 2007.06.29 | மன்னார் |
| 10 | VM/10 | வரைவற்ற மருதோண்டுவான் வேளாங்குளம் ஐக்கிய நாணய சங்கம் | 2007.06.29 | மன்னார் |
| 11 | VN/133 | வரைவற்ற எருக்கலம்பிட்டி நுண் கடனுதவு கூட்டுறவு சங்கம் | 2007.07.04 | மன்னார் |
| 12 | MN/148 | வரைவுள்ள மன்னார் வடக்கு தேர்தல் தொகுதி அபிவிருத்தி கூட்டுறவு சங்கம் | 2007.07.04 | மன்னார் |
| 13 | MN/51 | வரைவுள்ள சின்னப்பண்டிவிரிச்சான் ப.நோ.கூ. சங்கம் | 2007.09.20 | மன்னார் |
| 14 | VM63 | வரைவுள்ள எருக்கலம்பிட்டி அமீன் கடனுதவு கூட்டுறவு சங்கம் | 2007.10.09 | மன்னார் |
| 15 | J/1164 | வரைவற்ற கோவிற்குளம் ஐக்கிய நாணய சங்கம் | 2008.06.06 | வவுனியா |
| 16 | J/929 | வரைவற்ற சாளம்பைக்குளம் ஐக்கிய நாணய சங்கம் | 2008.06.06 | வவுனியா |
| 17 | V/432 | வரைவற்ற இராசேந்திரன்குளம் ஐககிய நாணய சங்கம் | 2008.07.30 | வவுனியா |
| 18 | VM/62 | வரைவற்ற புதுக்குளம் ஐக்கிய நாணய சங்கம் | 2008.07.30 | வவுனியா |
| 19 | VM/138 | வரைவுள்ள வவுனியா மேற்கு ப. நோ. கூ. சங்கம் | 2008.12.15 | வவுனியா |
| 20 | VM/28 | வரைவற்ற தவசியாகுளம் ஐக்கிய நாணய சங்கம் | 2008.12.15 | வவுனியா |
| 21 | MN/156A | வரைவற்ற எருக்கலம்பிட்டி ஆசிரியர் சிக்கன கடனுதவு கூட்டுறவு சங்கம் | 2009.10.30 | மன்னார் |
| 22 | J/ 33 | வரைவற்ற திருநெல்வேலி கிழக்கு ஐக்கிய நாணய சங்கம் | 2009.12.02 | யாழ்ப்பாணம் |
| 23 | JE/91 | வரைவற்ற கோவிலாக்கண்டி மத்தி ஐக்கிய நாணய சங்கம் | 2010.03.08 | யாழ்ப்பாணம் |

10-496

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண மாகாண சபையால் பிரேரிக்கப்பட்ட வீட்டுக்கூலி வரைவு நியதிச்சட்டம்

ஊவா மாகாண மாகாண சபைக்குள் செயற்படுத்துவதற்காக உத்தேசித்துள்ள மேல் குறிப்பிடப்பட்டுள்ள நகல் வரைவு நியதிச்சட்டத்தை பொது மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக கீழே பிரசுரிக்கின்றேன்.

இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 10 நாட்களின் பின் ஊவா மாகாண சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படும். இந்த விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஏதேனும் கருத்துகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றால் இந்த அறிவித்தலின் பின் 10 நாட்களுக்குள் அந்த கருத்துக்களை எழுத்து மூலம் கீழ்காணும் எனது முகவரிக்கு அறிவிக்கவும்.

ஆர். எம். குமாரசிரி ரத்நாயக,
வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர்வழங்கல்,
நுகர்வோர் செயற்பாடு, கூட்டுறவு, உணவு
விநியோகம் மற்றும் பகிர்ந்தளித்தல் அமைச்சர்,
ஊவா மாகாண மாகாண சபை.

வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர்வழங்கல்,
நுகர்வோர் செயற்பாடு, கூட்டுறவு, உணவு விநியோகம்
மற்றும் பகிர்ந்தளித்தல் அமைச்சு அலுவலகம்,
இலக்கம் 301, ஆர். எச். குணவர்தன மாவத்தை,
பதுளை,
2010.09.28.

**உத்தேச ஊவா மாகாண வீட்டுக்கூலி நகல் வரைவு நியதிச்சட்டம்**

இது ஊவா மாகாணத்தில் கூலி வீடுகளில் வாழும் மக்களின் உரிமைகளை பாதுகாப்பதற்கும், குடியிருப்பதற்கு தேவையான வசதிகளை ஏற்படுத்துவதற்கும் அவர்களின் நல்வாழ்வுக்கான வசதிகளை உருவாக்கும் நோக்கத்தை நிறைவேற்றுவதற்குமான 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீட்டுக்கூலி சட்டத்தை ஊவா மாகாணத்தில் செயற்படுத்துவதற்கு தேவையான சட்ட நிபந்தனைகளை அமைப்பதற்கும் மற்றும் சட்டபூர்வமான அதிகாரங்களுடனான நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளை நிறுவி நடத்துவதற்குமானதாகவும் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களை நிறைவேற்றுவதற்குமான நிபந்தனைகளை அமைப்பதற்குமாக உருவாக்கப்பட்ட நியதிச்சட்டமாகும்.

இந்நியதிச்சட்டம் 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க வீட்டுக்கூலி சட்டத்திற்கு மற்றும் அதன் பின் மேற்கொள்ளப்பட்ட திருத்தச்சட்டத்திற்கு ஏற்புடையதாகும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு 13 ஆம் திருத்தச்சட்டத்தின் மூலம் மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின் படி ஊவா மாகாண சபை இவ்வாறு பிரகடனப்படுத்துகிறது.

சுருக்கப் பெயரும் செயற்படும் திகதியும்.

01. இந்நியதிச்சட்டம் 'ஊவா மாகாண வீட்டுக்கூலி நியதிச்சட்டம்' என அழைக்கப்படுவதுடன் இது ஊவா மாகாண ஆணையாளர் அவர்களால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட நாளிலிருந்து அல்லது அதற்கு பின்னர் நிர்ணயிக்கப்பட்ட நாளிலிருந்து செயற்படும்.

யாப்பை சம்பந்தப்படுத்திக் கொள்ளல்.

02. இங்கு இதன் பின் "குறிப்பிட்ட யாப்பு" என குறிப்பிடப்படும் 1972 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்கம் கொண்ட வீட்டுக்கூலி யாப்பு மற்றும் அதனுடன் சம்பந்தப்பட்ட திருத்தச்சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளை மற்றும் பணிகளை ஊவா மாகாணத்தில் நிறைவேற்றுவதற்கும் அதில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்களை செயற்படுத்துவதற்கும் இங்கு இதன் பின் குறிப்பிடப்பட்டுள்ளது போல் பொறுப்புகளை வழங்குவதும் சட்டபூர்வமானதாகும்.

ஊவா மாகாணம்.

03. இங்கு இது மாகாணம் என அழைக்கப்படும். பதுளை மற்றும் மொனறாகலை என்ற இரு நிர்வாக மாவட்டங்களினால் உருவாக்கப்பட்ட பகுதி ஊவா மாகாணம் என அழைக்கப்படும்.

மாகாண சபை.

04. (1) இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பு 13 ஆம் திருத்தச்சட்டத்தின் பிரகாரம் மற்றும் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபை சட்டத்தின்படி ஊவா மாகாணத்தில் அமைக்கப்பட்டு, தற்சமயம்

நடைமுறையில் இருக்கும் சட்டதிட்டங்களுக்குட்பட்ட அரசியல் அதிகாரம் கொண்ட சபையை ஊவா மாகாண சபை என அழைக்கப்படுவதுடன் குறிப்பிட்ட யாப்புகளில் பாராளுமன்றம் என குறிப்பிட்டு அதற்கு வழங்கப்பட்டுள்ள சகல பொறுப்புகளையும் அந்த யாப்புகள் ஊடாக இந்த மாகாணத்தில் செயற்படுத்தும்போது, மாகாண சபை மூலம் நிறைவேற்றப்படவேண்டும்.

(2) குறிப்பிட்ட யாப்புகளில் நியமன உறுப்பினர் சபையென குறிப்பிட்டு அதற்கு வழங்கப்பட்டுள்ள சகல பொறுப்புகளையும் அந்த யாப்புகள் ஊடாக இந்த மாகாணத்தில் செயற்படுத்தும்போது ஊவா மாகாண சபை உறுப்பினர்களால் நிறைவேற்றப்படவேண்டும்.

*மாகாண அமைச்சர்.*

5. (1) ஊவா மாகாண சபையின் வீடமைப்பு விடயங்களுக்கு பொறுப்பான அமைச்சர். இங்கு மாகாண அமைச்சராக அழைக்கப்படுவதுடன் குறிப்பிட்ட யாப்புகளில் "அமைச்சர்" என குறிப்பிட்டு அவருக்கு வழங்கப்பட்டுள்ள சகல கடமைகளையும் மற்றும் பணிகளையும் மாகாணத்தில் நிறைவேற்றுவதற்கும் அதிகாரங்களை செயற்படுத்துவதும் மாகாண அமைச்சர் செயற்படுவாரேயானால் அது சட்டபூர்வமானதாகும்.

(2) குறிப்பிட்ட யாப்புகளில் அமைச்சரால் அமைக்கப்பட்டுள்ள தற்சமயம் நடைமுறையில் இருக்கும் உத்தரவுகள் மாகாண அமைச்சரால் விதிக்கப்பட்ட உத்தரவுகளாக கவனத்தில் கொள்ளப்படுவதுடன், குறிப்பிட்ட யாப்புகள் ஊவா மாகாணத்தில் செயற்படுத்தும் போது அந்த யாப்புகளின் அடிப்படையில் அமைச்சரால் விதிக்கப்பட்ட உத்தரவுகளின்படி செயற்படுவது சட்டபூர்வமானதாக இருத்தல் வேண்டும். அத்துடன் தற்சமயம் அமுலில் இருக்கும் உத்தரவுகளை இரத்து செய்வதற்கு, மாற்றுவதற்கு திருத்தம் செய்வதற்கு அல்லது புதிய உத்தரவுகளை மாகாண அமைச்சர் அமைக்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

*மாகாண வீடமைப்பு திணைக்களம் ஒன்றை நிறுவுதல்.*

6. குறிப்பிட்ட யாப்புகளில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைகளும் மற்றும் பணிகளும் ஊவா மாகாணத்தில் செயற்படுத்துவதற்காக மாகாண வீட்டு திணைக்களமொன்றை நிறுவப்பட வேண்டும். அந்த திணைக்களம் ஊவா மாகாண வீடமைப்பு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சரின் கீழ் செயற்படும் புறம்பான அலகாக அல்லது பிரிவாக இருத்தல் வேண்டும்.

7. குறிப்பிட்ட யாப்புகள் ஊவா மாகாணத்தில் செயற்படுத்தும் போது கூறப்பட்ட யாப்புகளில் "தேசிய வீடமைப்பு திணைக்களம்" என குறிப்பிட்டு அதற்கு வழங்கப்பட்டுள்ள சகல கடமைகளையும் மற்றும் பணிகளையும் 13 ஆம் அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தின் படி மாகாணத்தில் நிறைவேற்றப்படுவதும் பொறுப்பேற்பதும் மேலே 6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண வீடமைப்பு திணைக்களம் மூலம் நடாத்தப்படுவதும் சட்டபூர்வமானதாகும்.

*மாகாண வீடமைப்பு ஆணையாளர்.*

8. (1) மேலே 6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள மாகாண வீடமைப்பு திணைக்களத்தின் தலைமை பதவிக்கு மாகாண வீடமைப்பு ஆணையாளர் ஒருவரை ஊவா மாகாண ஆளுநர் அவர்கள் நியமிக்கவேண்டும். அவர் இலங்கை நிர்வாக சேவையில் முதற்தர அதிகாரியாக இருத்தல் வேண்டும்.

(2) குறிப்பிட்ட யாப்புகள் ஊவா மாகாணத்தில் செயற்படுத்தும் போது அந்த யாப்புகளில் "தேசிய வீடமைப்பு ஆணையாளர்" அல்லது "ஆணையாளர்" மட்டும் என குறிப்பிட்டு அவருக்கு வழங்கப்பட்டுள்ள சகல கடமைகளையும், பணிகளையும் 13 ஆம் அரசியலமைப்பு திருத்தச்சட்டத்தின்படி ஊவா மாகாணத்தில் நிறைவேற்றுவதற்கும் கூறப்பட்ட யாப்புகளின் மூலம் அவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை ஊவா மாகாணத்திற்குள் செயற்படுத்தும் பணியை, மாகாண வீடமைப்பு ஆணையாளர் நடைமுறைப்படுத்த வேண்டும். அவ்வாறு நடைமுறைப்படுத்துவது சட்டபூர்வமானதாகும்.

*மாகாண வீடமைப்பு வங்கி கணக்கு.*

9. குறிப்பிட்ட யாப்புகள் ஊவா மாகாணத்தில் செயற்படுத்தும் போது அந்த யாப்புகளில் "தேசிய வீடமைப்பு நிதியம்" அல்லது "சீர்திருத்த நிதியம்" ஆக குறிப்பிட்டு அந்த நிதியத்திற்கு வழங்கப்பட்டுள்ள சகல பணிகளையும் மாகாணத்தில் நிறைவேற்றுவதற்காக "மாகாண வீட்டு வங்கி கணக்கு" என அழைக்கப்படும், நிதியத்தை ஏற்படுத்தி குறிப்பிட்ட யாப்புகள் மூலம் தேசிய வீடமைப்பு நிதியத்தின் மூலம் நிறைவேற்றப்படவேண்டிய சகல கடமைகளையும் ஊவா மாகாணத்திற்குள் வீட்டுக்கணக்கு மூலம் நிறைவேற்றப்படுவது சட்டபூர்வமானதாகும்.

பிரதேச சபைகளை உள்ளடக்கப்பட வேண்டும்.

10. (1) குறிப்பிட்ட யாப்புகளில் ''பிரதேச அதிகாரசபை'' என அழைக்கப்படும் சகல இடங்களிலும் தற்சமயம் செயற்படும் பிரதேச சபைகளும் உள்ளடக்கப்படவேண்டும். அந்த யாப்புகளில் நகர சபை மற்றும் கிராம சபை என குறிப்பிடப்பட்டுள்ள சகல இடங்களிலும் ''பிரதேச சபை'' க்கு பதிலாக குறிப்பிட்ட யாப்புகள், ஊவா மாகாணத்தில் செயற்படுத்துவது சட்டபூர்வமானதாகும்.

(2) குறிப்பிட்ட யாப்புகள் ஊவா மாகாணத்தில் செயற்படுத்தும் போது அந்த யாப்புகளில் நகர சபை மற்றும் கிராம சபை என குறிப்பிடப்பட்டு அந்த நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ள சகல அதிகாரங்களையும், கடமைகளையும், பணிகளையும் பிரதேச சபை மூலம் செயற்படுத்துவதும், பொறுப்பேற்றுக்கொள்வதும் சட்டபூர்வமானதாகும்.

முரண்பாடு தோன்றினால் சிங்கள மொழியிலுள்ள மூல வாக்கியங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும்.

11. இந்த நியதிச்சட்டத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில பொருற்பதங்களுக்கு இடையில் முரண்பாடு தோன்றினால் சிங்கள மொழியிலுள்ள மூல வாக்கியங்கள் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

10-560/1

---

**ஊவா மாகாண மாகாண சபை**

ஊவா மாகாண மாகாண சபையால் பிரேரிக்கப்பட்ட வீடமைப்பு அபிவிருத்தி நகல் வரைவு நியதிச்சட்டம்

ஊவா மாகாண மாகாண சபைக்குள் செயற்படுத்துவதற்காக உத்தேசித்துள்ள மேல் குறிப்பிடப்பட்டுள்ள நகல்வரைவு நியதிச்சட்டத்தை பொது மக்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்காக கீழே பிரசுரிக்கின்றேன்.

இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 10 நாட்களின் பின் ஊவா மாகாண சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படும் இந்த விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஏதேனும் கருத்துகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றால் இந்த அறிவித்தலின் பின் 10 நாட்களுக்குள் அந்த கருத்துக்களை எழுத்து மூலம் கீழ்க்காணும் எனது முகவரிக்கு அறிவிக்கவும்.

ஆர். எம். குமாரசிரி ரத்நாயக,
வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர்வழங்கல்,
நுகர்வோர் செயற்பாடு, கூட்டுறவு, உணவு
விநியோகம் மற்றும் பகிர்ந்தளித்தல் அமைச்சர்,
ஊவா மாகாண மாகாண சபை.

வீதி அபிவிருத்தி, வீடமைப்பு, நீர்வழங்கல்,
நுகர்வோர் செயற்பாடு, கூட்டுறவு, உணவு விநியோகம்
மற்றும் பகிர்ந்தளித்தல் அமைச்சு அலுவலகம்,
இலக்கம் 301, ஆர். எச். குணவர்தன மாவத்தை,
பதுளை,
2010.09.28.

**உத்தேச ஊவா மாகாண வீடமைப்பு அபிவிருத்தி நகல் வரைவு நியதிச்சட்டம்**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்புச்சட்டத்தின் பதின்மூன்றாம் திருத்தத்தின் ஒன்பதாம் அட்டவணையின் 1 ஆம் பட்டியலில் 5 ஆம் பிரிவின் படி மாகாண சபைக்கு அதிகாரம் வழங்கும் நிபந்தனைகளுக்கிணங்க ஊவா மாகாணத்தில் வீடமைப்பு பணியை மேம்படுத்துமுகமாக இதன்மூலம் நன்மை பெருபவர்களை தெரிவு செய்தல், அவர்களுக்கு பொருளுதவி, கடன் அல்லது நிதியுதவி வழங்குதல், காணி அல்லது கட்டப்பட்ட வீடுகளை வழங்குவது உள்ளடங்களாக வீட்டு வசதியை மேம்படுத்தக்கூடிய திட்டங்களை அமைத்தல், செயற்படுத்தல். தொடர்புகளை ஏற்படுத்துதல், கண்காணித்தல், முன்னேற்றத்தை நிர்வகிப்பதுடன் அவ்வாறான திட்டங்களை செயற்படுத்துவதற்கு தேவையான நிதி வசதிகளை ஏற்படுத்துதல் மற்றும் அதற்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதியை முகாமைத்துவம் செய்வதற்கும், வீடு அபிவிருத்தியை இலக்காகக்கொண்டுள்ள மக்களின் பங்களிப்பை பெற்றுக்கொள்வதற்கும் தேவையான சமூக அமைப்புகளை நிறுவுதல் மற்றும் அந்த அமைப்புகளுக்கு அதிகாரம் வீடு அபிவிருத்தி திட்டங்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை வழங்குவதற்கான நிபந்தனைகளை அமைப்பதற்குமாக உருவாக்கிய நியதிச்சட்டமாகும் இது. இந்த நியதிச்சட்டம் 1979 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க தேசிய வீடு அபிவிருத்தி அதிகார சபையின் சட்டத்திற்கு இசைவுற்றதாகும்.

ஊவா மாகாணத்தில் வாழும் அனைவருக்கும் வாழ்வதற்கு பொருத்தமான வீட்டை வழங்குவதும் மற்றும் பெற்றுக்கொள்வதற்கும், கட்டிக்கொள்வதற்கும் தேவையான உதவி வழங்குவதன் மூலம் அவர்களின் வீட்டுத்தேவையை நிறைவேற்றுவதே ஊவா மாகாண சபையின் கொள்கையென்பதால், முகவுரை.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபை இவ்வாறு பிரகடனப்படுத்துகிறது :

01. இந்நியதிச்சட்டம் ஊவா மாகாண சபையின் வீடமைப்பு அபிவிருத்தி நியதிச்சட்டம் என அழைக்கப்படுவதுடன் ஊவா மாகாண ஆளுநர் (இதன் பின் ''ஆளுனர்'' என அழைக்கப்படும்) அவர்களின் அங்கீகாரம் வழங்கப்படும் தினத்திலிருந்து இந் நியதிச்சட்டம் செயற்படும். சுருக்கப் பெயரும் செயற்படும் திகதியும்.

## I ஆம் பகுதி

### பொது

02. ஊவா மாகாணத்தில் வாழும் மக்கள் வாழ்வதற்கு பொருத்தமான வீட்டை பெற்றுக்கொள்வதற்கும் அல்லது கட்டிக்கொள்வதற்கும் தேவையான உதவி வழங்குவதற்கான நிபந்தனைகளை அமைப்பதே இந் நியதிச்சட்டத்தின் நோக்கமாக இருத்தல் வேண்டும். இலக்கு.

03. மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கை அடைவதற்கும், இந்நியதிச்சட்டத்தின் பணியையும் கடமையையும் நிறைவேற்றுவதற்கும் ஊவா மாகாணத்திற்காக வீடமைப்பு அபிவிருத்தி திணைக்களமொன்று (இதன் பின் ''திணைக்களம்'' என அழைக்கப்படும்) செயற்பட வேண்டும், அது தனியான திணைக்களமாக அல்லது ஒரு அலகாக ஒழுங்கமைக்கப்படல் வேண்டும். வீடமைப்பு அபிவிருத்தி திணைக்களம்.

04. மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள திணைக்களத்தின் தலைமை பதவிக்கு மாகாண வீடமைப்பு ஆணையாளர் ஒருவரை (இதன் பின் ''ஆணையாளர்'' என அழைக்கப்படும்) ஆளுனர் நியமிக்கவேண்டும், அவர் இலங்கை நிர்வாக சேவையில் முதலாம் தர அதிகாரியாக இருத்தல் வேண்டும். மாகாண வீடமைப்பு ஆணையாளர்.

05. மாகாண வீடமைப்பு ஆணையாளருக்கு உதவுவதற்காக உதவி ஆணையாளர்கள் மற்றும் ஏனைய அதிகாரிகளையும் நியமிக்கலாம். ஏனைய அதிகாரிகள்.

06. மாகாண வீடமைப்பு ஆணையாளர் ஊவா மாகாண வீடமைப்பு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சின் அமைச்சரின் (இதன் பின் ''அமைச்சர்'' என அழைக்கப்படும்) பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு மற்றும் ஊவா மாகாண வீட்டு விடயத்துக்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர் (இதன் பின் ''செயலாளர்'' என அழைக்கப்படும்) நாயகத்தின் உத்தரவுகளுக்கும் கண்காணிப்புக்கும் கீழ் செயற்படவேண்டும்.

## II ஆம் பகுதி

### அதிகாரமும் பணிகளும்

7. அமைச்சர் மற்றும் செயலாளரின் உத்தரவுகளுக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுவது ஆணையாளரின் பொறுப்பாகும். வீடமைப்பு ஆணையாளரின் பணிகளும் கடமைகளும்.

(1) குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கும் மற்றும் பொது மக்களின் உதவி பெற்று வாழ்பவர்களுக்கும் உதவயிாக பொருட்கள் மற்றும் நிதியுதவி வழங்குவதற்கான செயற்திட்டத்தை ஒழுங்கமைத்தல்.

(2) குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு வீடு அபிவிருத்திக்காக கடனுதவி வழங்கல்.

(3) உதவி பெற்றுத்தரும் கைத்தொழில் வீட்டு செயற்திட்டத்தை ஒழுங்கமைத்தல்.

(4) வீடமைப்பு அபிவிருத்திக்காகவே கட்டிட பொருட்களை உற்பத்திசெய்தல்.

(5) வீடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்காக அடிப்படை வசதிகளை ஏற்படுத்தல்.

(6) மக்கள் வசப்படுத்தப்பட்ட வீட்டு செயற்திட்டங்களுக்கு மேலும் தேவையான வசதிகளை ஏற்படுத்தல்.

(7) வீடமைப்பு செயற்திட்டங்களுக்கு பொருத்தமான காணிகளை இனங்காணல், அக்காணிகளை அபிவிருத்தி செய்தல், அந்த காணிகளில் வீடுகளை அமைத்தல்.

(8) வீடுகள் மற்றும் காணிகள் வழங்கப்படவேண்டியவர்களை இனங்காணல், தெரிவுசெய்தல், அவர்களுக்கான வீடுகளையும் காணியையும் கையளித்தல்.

(9) வீடுகளை கட்டிக்கொள்வதற்கு பொருத்தமான காணிகள் இல்லாதோருக்கு அதற்கேற்ப காணிகளை வழங்குதல்.

(10) பொருளுதவி, நிதியுதவி, கடனுதவி வழங்குவதற்கு பொருத்தமான வழிமுறைகளை அமைச்சரின் சம்மதத்துடன் அமைத்தல்.

(11) கடனுதவி மற்றும் சொத்துகளின் பெறுமதியை மீள் அறவிடுவதற்கு பொருத்தமான வழிமுறைகளை அமைச்சரின் சம்மதத்துடன் அமைத்தல்.

(12) வீடமைப்பு அபிவிருத்தி நோக்கத்துக்காக பலவித மூலங்களினால் கிடைக்கும் நிதியை அமைச்சரினதும் செயலாளரினதும் சம்மதத்துடன் பொருத்தமான செயற்திட்டங்களுக்கு பயன்படுத்துதல்.

(13) வீடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கான திட்டங்களை அமைத்தல், செயற்படுத்துதல், நிர்வகித்தல், முகாமைத்துவம் செய்தல், கண்காணித்தல் மற்றும் பின் மதிப்பீட்டை மேற்கொள்ளல்.

(14) வீடமைப்பு அபிவிருத்தி பணிகளுக்காக சமூக அமைப்புகளை நிறுவுவதற்கு பொருத்தமான விடயங்களை மேற்கொள்ளல் அவ்வாறான அமைப்புகளை பதிவுசெய்தல்.

(15) வீடமைப்பு அபிவிருத்தி பணிகளுடன் தொடர்புடைய வேறு நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் வீடமைப்பு அபிவிருத்தி நோக்கத்துடனான செயலாளருக்காக பணிகளுக்கு எழுத்துமூல ஒப்பந்தம் செய்து கொள்வதற்கு உத்தியோகபூர்வ ஆவணங்களில் கையொப்பமிடல் அத்துடன் அவ்வாறான நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளுடன் இணைந்து செயற்படல்.

(16) இந்த நியதிச்சட்டத்தின் பணிகளுக்கு நாடளாவிய ரீதியில் நிதி வழங்கும் வழிகளில் பணத்தை கடனாக பெற்றுக்கொள்வதற்கும், வீடு வழங்கப்படவேண்டியவர்களுக்கு தேவையான வசதிகளை செய்து கொடுத்தல்.

(17) இந்த நியதிச்சட்டத்தின் பிரகாரம் வழங்கப்படும் கட்டிடங்களுக்கான கூலி, குத்தகை அல்லது கட்டணம் அறவிடுதல் மற்றும் வசூல் செய்தல்.

அமைச்சரின் அதிகாரங்கள்.

8. இந்த நியதிச்சட்டத்தின் இலக்கை அடைவதற்காக அமைச்சருக்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரங்கள் இருத்தல் வேண்டும்.

(1) வீடமைப்பு அபிவிருத்தி நோக்கத்துடன் அசையும் மற்றும் அசையாத சொத்துகள் கொடையாக அல்லது வேறு விதத்தில் பெற்றுக்கொள்ளல், பாதுகாத்தல், நிர்வகித்தல், விற்பனை செய்தல், குத்தகைக்கு கொடுத்தல், ஒருவருக்கொருவர் மாற்றிக்கொள்ளல் அல்லது வீடமைப்பு அபிவிருத்தி நோக்கத்துக்காக வேறு விதத்தில் அகற்றுவதற்காக அங்கீகாரம் வழங்கல்.

(2) வீடமைப்புக்கான பொருளுதவி. நிதியுதவி, கடனுதவி காணி அல்லது வீடு வழங்கும் போது குறைந்த வருமானம் பெறுபவர்களின் அல்லது பயன்பெறுபவர்களின் வருமான எல்லை உள்ளிட்ட தகுதிகளை தீர்மானித்தல்.

(3) வீடமைப்பு அபிவிருத்தி நோக்கத்துக்காக ஒதுக்கப்பட்ட காணியை அந்த விடயத்துக்காகவே பயன்படுத்துவதை அங்கீகரித்தல்.

(4) கடனுதவி, நிதியுதவி, காணி, வீட்டு அல்லது பொருளுதவி வழங்கும்போது, பணம், வட்டி, தவணை, அளவு, காலம் போன்றவற்றின் வரையறையை தீர்மானித்தல்.

(5) இந்த நியதிச்சட்டத்தின் பணிகளுக்கு பொருத்தமான உத்தரவுகளை பிறப்பித்தல்.

நிதி ஏற்பாடு.

9. (1) இந்த நியதிச்சட்டத்தின் பணிகளுக்கு மாகாண சபையின் வருடாந்த வரவுசெலவில் நிதி ஒதுக்கப்படவேண்டும்.

(2) வீட்டு அபிவிருத்தி பணிகள் நிமித்தம் வீட்டு அபிவிருத்தி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சின் மூலம் அல்லது திணைக்களத்தின் மூலம் அல்லது அமைப்புகள் மூலம் கிடைத்த வருமானம் மாகாண சபை வங்கி கணக்குகள் ஊடாக மாகாண அமைச்சுக்கு வழங்கப்படவேண்டும்.

(3) வீடமைப்பு அபிவிருத்தி நிமித்தம் ஏற்பாடு செய்யப்படும் லொத்தர் வருமானத்தை அமைச்சு பெற்றுக்கொள்ளலாம்.

(4) வீடமைப்பு அபிவிருத்திக்காக பலவித மூலங்கள் மூலமாக கிடைக்கும் கொடைகளை அமைச்சு பொறுப்பேற்கலாம்.

(5) அரச சார்பற்ற அமைப்புகளினால் வழங்கப்படும் கொடைகளை அமைச்சு பொறுப்பேற்கலாம்.

(6) இந்த நியதிச்சட்டத்தின் பிரகாரம் அமைச்சு அல்லது திணைக்களம் மூலம் முகாமைத்துவம் செய்யப்பட்ட சொத்துக்களிலிருந்து பெறப்படும் கூலி, குத்தகை பணம் வேறு விதத்தில் கிடைக்கும் பலவித வருமானத்தை அமைச்சு பொறுப்பேற்கலாம்.

(7) கடன் தவணையை அறவிடுவதன் மூலம் சொத்துகளை வழங்குவதன் மூலம், மற்றும் தவணை முறையில் அல்லது ஒரேயடியாக கிடைக்கும் வருமானத்தை அமைச்சு பொறுப்பேற்கலாம்.

10. (1) மேலே 9 ஆம் பிரிவின் பிரகாரம் கிடைக்கும் பலவித வருமானத்தை வீடமைப்பு அபிவிருத்தி கணக்கில் (இதன் பின் "கணக்கு" என அழைக்கப்படும்) சேகரிக்கக்கூடியதாக இருக்கவேண்டும். வீடமைப்பு அபிவிருத்தி கணக்கு.

(2) கணக்கின் நிதியாண்டு கலண்டர் ஆண்டாகும்.

(3) இந்த கணக்கு 1987, மாகாண சபை சட்டத்தின் இலக்கம் 42 ஆம் அட்டவணைப்படி கணக்காய்வுக்கு உட்பட்டது. ஊவா மாகாண உள்ளக கணக்காய்வு பணிப்பாளரின் கணக்காய்வுக்கும் அமைச்சின் உள்ளக கணக்காய்வுக்கும் உட்படவேண்டும்.

(4) இக் கணக்கு செயலாளரின் நேரிடையான கண்காணிப்பில் இருத்தல் வேண்டும்.

வீடமைப்பு அபிவிருத்தி சங்கம்.

11. (1) வீடமைப்பு அபிவிருத்தி நோக்கத்தைக்கொண்ட நிகழ்ச்சிகளுக்கு உதவிகளை பெற்றுக்கொள்வதற்காக சமூகத்திற்குள் உருவாக்கப்படும், வீடமைப்பு அபிவிருத்தி சங்கங்கள் சட்டபூர்வமானதாக இருத்தல் வேண்டும்.

(2) மேலே (1) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கங்களை அமைத்தல் மற்றும் நிர்வகிப்பதற்காக பொருத்தமான யாப்பை உருவாக்கி அமைச்சரின் உத்தரவுடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்டு செயற்படுத்தலாம்.

(3) மேலே (2) ஆம் உப பிரிவின் படி சட்டதிட்டங்களுக்கமைய அமைக்கப்பட்ட சங்கங்கள் ஆணையாளரால் பதிவுசெய்யப்பட்ட பின் அதை உறுதி செய்வதற்கு சான்றிதழ் வழங்கலாம்.

(4) பதிவுசெய்யப்பட்ட வீடமைப்பு அபிவிருத்தி சங்கத்திற்கு, கேள்வி அறிவித்தல் செயல்முறையை தவிர்த்து, வீட்டு அபிவிருத்தி நோக்கத்தைக்கொண்டுள்ள அபிவிருத்தி செயற்திட்டங்களுக்கு ஒப்பந்தத்தை வழங்கக்கூடியதாக இருக்கவேண்டும். ஒப்பந்தம் மூலம் வழங்கக்கூடிய ஆகக்கூடிய பெறுமதியை, காலத்திற்கு காலம் திறைசேரியின் அல்லது நிதி அமைச்சின் செயலாளரால் நிர்ணயிக்கப்படும், சங்கங்கள் நிர்ணயிக்கப்படும் வரையறைக்கு உட்படவேண்டும்.

(5) வீடமைப்பு அபிவிருத்தி நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக ஆணையாளர் அல்லது செயலாளர் வீடமைப்பு அபிவிருத்தி சங்கங்களின் உதவியை பெற்றுக்கொள்ளலாம்.

12. (1) இந்த நியதிச்சட்டத்தின் கீழ் ஒரு காணியை, பொருளுதவியை, நிதியுதவி, கடனுதவி, அல்லது வேறு உதவியை பெற்றுக்கொண்ட பயன்பெறுபவர்கள் ஆணையாளருடன் தனது வீடமைப்பு அபிவிருத்தி நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக பொருத்தமான நிபந்தனைகள் உள்ளடக்கப்பட்ட ஒப்பந்தத்தில் (இதன் பின் "ஒப்பந்தம்" என அழைக்கப்படும்) உள்ளடக்கப்படவேண்டும். பயன் பெறுபவர்களின் பொறுப்பு.

(2) மேலே (1) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்தின்படி செயற்படாத பயன்பெறுபவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள காணி, வீடு, பொருளுதவி, நிதியுதவி, கடனுதவி, அல்லது மற்றைய உதவிகளை மீளப்பெற்றுக்கொள்வதற்கு ஆணையாளர் ஆனவர் நீதிவான் நீதிமன்றத்துக்கு வேண்டுகோள் விடுக்கக்கூடியதாக இருக்கவேண்டும்.

(3) மேலே (2) ஆம் உப பிரிவின் பிரகாரம் நீதிவான் நீதிமன்றத்திற்கு வேண்டுகோள் விடுப்பதற்கு முன் ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் மீறப்பட்டுள்ளதாக பயன்பெறுபவருக்கு பதிவு தபால் மூலம் தெரிவிப்பதற்கும், நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு 21 நாட்களுக்கு குறையாத கால எல்லையை வழங்குவதற்கும் ஆணையாளர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(4) மேலே (2) ஆம் உப பிரிவின் பிரகாரம் நீதிபதி நீதிமன்றத்திற்கு வேண்டுகோளை சமர்ப்பிக்கும் போது, ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்துக்களில் அல்லது பொருட்களில் அல்லது நிதியில் அல்லது பெறுமதிக்கு மேலதிகமாக பெறுமதியின் 25% வீதத்தை கட்டணமாகவும் நிர்வாக செலவாகவும் அறவிடுவதற்கான வேண்டுகோளை சமர்ப்பிக்கலாம்.

(5) மேலே (2) ஆம் உப பிரிவின் பிரகாரம் நீதிமன்றத்திற்கு வேண்டுகோளை சமர்ப்பித்த பின் மீள பெற்றுக்கொண்ட காணி, வீடு, பொருட்கள் மற்றும் பணத்தை தகுதியுள்ள வேறொரு பயன் பெறுபவருக்கு ஆணையாளர் வழங்குவாரேயானால் அது சட்டத்திற்கு ஏற்புடையதாகும்.

(6) மேலே (2) ஆம் உப பிரிவின் பிரகாரம் நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட வேண்டுகோளின் அடிப்படையில் நீதிமன்றத்தால் அறவிடப்படும் சகல பணமும் வீடு அபிவிருத்தி கணக்கில் வைப்பிலிடவேண்டும்.

## III ஆம் பகுதி

### *பொது நிபந்தனைகள்*

*சொத்து சுவீகரித்தலும் நட்டஈடு வழங்கலும்.*

13. (1) இந்த நியதிச்சட்டத்தின் பணிகளுக்காக எந்தவொரு காணியையோ அல்லது அந்த காணியில் தொடர்பை அல்லது தேவையென்றால் அந்த காணியை அல்லது தொடர்பை (460 ஆவது பிரமானத்திலுள்ள) காணி சுவீகரிக்கும் சட்டத்தின் அடிப்படையில் ஊவா மாகாண சபைக்கு பதிலாக அரசாங்கம் சுவீகரிக்கலாம்.

(2) இந்த நியதிச்சட்டத்தின் பணிகளுக்காக மாகாணத்திற்குள் ஒரு அரச காணி தேவைப்படும் சந்தர்ப்பத்தில் அரசியலமைப்பு சட்டத்தில் 13 ஆம் திருத்தச்சட்டத்தில் II ஆம் பகுதியில் 1.1 : 2 பிரிவின்படி நடவடிக்கை எடுக்கவேண்டும்.

(3) காணி சுவீகரித்தல் அல்லது வேறு ஏதோ ஒரு விடயம் தொடர்பாக செலுத்தவேண்டிய நட்டஈட்டு தொகையை கணக்கெடுக்கும் போது (460 ஆவது பிரமானத்திலுள்ள) காணி சுவீகரிக்கும் சட்டத்தின் அடிப்படையில் நட்டஈட்டு வழங்கவேண்டும். அதற்கான செலவுகளை மாகாண சபை நிதியம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

(4) இந்த நியதிச்சட்டத்தின் பணிகளுக்காக பொருத்தமான ஒரு காணியை தெரிவுசெய்து, இனம் கண்டதும், அமைச்சர் அமைச்சரவையில், மாகாண சபையில், ஆளுநரின் அங்கீகாரம் பெற்றுக்கொண்ட பின் காணி சுவீகரிக்கும் பணியை ஆரம்பிக்கவேண்டும்.

(5) மேலே (1) அல்லது (2) ஆவது உப பிரிவின் அடிப்படையில் சுவீகரிக்கப்பட்ட ஒரு காணியை வீடமைப்பு அபிவிருத்திற்கான விடயங்களை தவிர்த்து வேறு எக்காரியத்திற்கும் ஈடுபடுத்தக்கூடாது.

*சொத்துகளை கையளித்தல்.*

14. (1) ஒரு காணியை அல்லது ஒரு வீட்டை இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் ஒரு பயன்பெறுபவருக்கு வழங்கியதும், அந்த சொத்தின் பெறுமதியை பயன் பெறுபவர் மாகாண சபைக்கு ஆணையாளர் அறிவித்தது போல் தவணை முறையில் அல்லது ஒரேயடியாக செலுத்தலாம்.

(2) மேலே (1) ஆம் உப பிரிவின் அடிப்படையில் வழங்கப்படும், சொத்தின் முழு பெறுமதியையும் மீள பெற்றுக்கொண்டதும் அந்த சொத்துக்கான உறுதியையும் நொத்தாரிசு மூலம் எழுதி கையொப்பமிட்டு உரியவருக்கு கொடுத்து, அதன் உரிமையை ஆணையாளர் வழங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(3) மேலே (2) ஆம் உப பிரிவின் பிரகாரம் காணியின் உறுதியை வழங்கவேண்டுமாயின், அங்கு வீட்டை கட்டி முடித்திருக்க வேண்டும்.

*உத்தரவுகள்.*

15. (1) இந்த நியதிச்சட்டத்தின் பணிகளையும் கடமைகளையும் நிறைவேற்றிக்கொள்வதற்கும், இலக்கை அடைவதற்கும், அதன் நடவடிக்கைகளை முறையாக நிர்வகிப்பதற்கு தேவைப்படும் பொருத்தமான மற்றும் அதற்குரிய உத்தரவுகளை அமைச்சர் பிறப்பிக்கலாம்.

(2) அமைச்சரால் பிறப்பிக்கப்படும் உத்தரவுகள் வர்த்தமானியில் வெளியிடப்படவேண்டும்.

(3) அவ்வாறு வர்த்தமானியில் வெளியிடப்படும் உத்தரவுகள், வெளியிடப்பட்ட தினத்தில் இருந்து அல்லது அதில் குறிப்பிடப்பட்டிருக்கும் தினத்தில் அதன் பின் குறிப்பிட்ட நாளிலிருந்து செயல்படும்.

(4) வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின் அந்த உத்தரவுகளுக்கான மாகாண சபையின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்கு, அமைச்சர் அதை மாகாண சபைக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) மேலே (4) ஆம் உப பிரிவின் அடிப்படையில் மாகாண சபைக்கு சமர்ப்பிக்கப்படும் உத்தரவுகளுக்கு மாகாண சபையின் அங்கீகாரம் கிடைக்காவிட்டால், அதையும் வர்த்தமானியின் மூலம் பொது மக்களுக்கு அறியத்தருவது அமைச்சரின் பொறுப்பாகும்.

(6) மேலே (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பின் மற்றும் (5) ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள அறிவித்தலை வெளியிடும், இடைப்பட்ட காலப்பகுதியையும் அந்த உத்தரவின் அடிப்படையில் செய்த காரியத்தையும் சட்டத்திற்கு முரணான காரியமாக கருத்தில் கொள்ளக்கூடாது.

16. இந்த நியதிச்சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள சொற்பதங்கள் தொடர்பாக வேறு அர்த்தங்கள் தேவைப் பட்டாலொழிய, ''மாகாணம்'' என்பது பதுளை மற்றும் மொனராகலை என்ற இரு மாவட்டங்களினால் உருவாக்கப்பட்ட ஊவா மாகாணம் ஆகும் ; ''மாகாண சபை'' என்பது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணம் ஆகும். பொருள்கோடல்.

''ஆளுனர்'' என்பது ஊவா மாகாண ஆளுனராகவும்,

''அமைச்சர்'' என்பது ஊவா மாகாண மாகாண சபையில் வீடமைப்பு அபிவிருத்தி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சர்,

''செயலாளர்'' என்பது ஊவா மாகாண மாகாண சபையின் வீடமைப்பு அபிவிருத்தி விடயத்துக்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர்,

''ஆணையாளர்'' என்பது ஊவா மாகாண மாகாண சபையின் வீடமைப்பு அபிவிருத்தி திணைக்களத்தின் ஆணையாளர்,

''திணைக்களம்'' என்பது ஊவா மாகாண மாகாண சபையின் வீடமைப்பு அபிவிருத்தி திணைக்களத்தின் அல்லது வீட்டு அபிவிருத்தி பணிகளை நிறைவேற்றும் நோக்கில் நிறுவப்பட்டிருக்கும் ஒரு பிரிவு அல்லது அலகு,

''கணக்கு'' என்பது ஊவா மாகாண மாகாண சபை வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சு, வீடமைப்பு அபிவிருத்தி நோக்கத்துடன் திறக்கப்பட்டிருக்கும் வீடு அபிவிருத்தி வங்கி கணக்கு,

''சங்கம்'' என்பது வீடமைப்பு அபிவிருத்தி பணிகளுக்காக, பொது மக்களின் பங்களிப்புடன் அமைக்கப்பட்டிருக்கும் வீடமைப்பு அபிவிருத்தி சங்கம் என பொருள்படும்.

17. இந்த நியதிச்சட்டத்தில் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில பொருந்பதங்களுக்கிடையில் முரண்பாடு தோன்றினால் சிங்கள மொழியிலுள்ள மூல வாக்கியங்கள் அமுல்படுத்தப்பட வேண்டும். தெளிவின்மை தோன்றினால் சிங்கள மூலவாக்கியங்கள் அமுல்படுத்தப்படல் வேண்டும்.

10-560/ 2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.